**செய்தி வெளியீடு எண்: 919** **நாள்: 17.10.2010**

தமிழகத்தின் மிக முக்கிய பண்டிகையான தீபாவளியை முன்னிட்டு, சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள "வள்ளுவர் கோட்டம்" வளாகத்தில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள "சிறப்பு கைத்தறிக் கண்காட்சியினை" 19.10.2010 அன்று காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் **திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள் தலைமையில், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் **கவிஞர் கனிமொழி** அவர்கள் துவக்கிவைக்க இசைந்துள்ளார்கள்.

இந்த எழில்மிகு சிறப்பு கைத்தறிக் கண்காட்சியில், தமிழகத்தில் உற்பத்தியாகும் கைத்தறி இரகங்கள் மட்டுமல்லாது காதி, சணல் கொண்டு உற்பத்தியாகும் இரகங்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் ஆகியவை காட்சிக்கும் விற்பனைக்கும் வைப்பதற்கு 75 அரங்குகள் அமைக்கப்பட உள்ளது.

தமிழகத்தில் இயங்கிவரும் முன்னனி பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கோ–ஆப்டெக்ஸ், காதி கிராப்ட், பூம்புகார் மற்றும் கைத்தறிக் குழுமங்கள் இந்த சிறப்புக் கைத்தறிக் கண்காட்சியில் பங்கேற்க உள்ளன.

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒருசில வாரங்களே உள்ள நிலையில், சென்னையில் வசிக்கும் வாடிக்கையாளர்கள், மிகச் சிறந்த கைத்தறி இரகங்களை அரசுத் தள்ளுபடியுடன் குறைந்த விலையில் ஒரே இடத்தில் வாங்குவதற்கு வசதியாக இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சியில், காஞ்சிபுரம், திருபுவனம் மற்றும் ஆரணி பகுதிகளில் பிரத்தியேக வடிவமைப்புகளில் எழில்மிகு வண்ணக்கலவையில் உற்பத்தியாகும் பட்டுச் சேலைகள், அனைவரும் வாங்கும் விலையில் டெக்ஸ்டரைஸ்டு ஜரிகை கொண்டு உற்பத்தியாகும் பட்டுச் சேலை இரகங்கள், காஞ்சிபுரம், சிறுமுகை, சேலம் மற்றும் பரமக்குடி கைத்தறிப் பகுதிகளில் உற்பத்தியாகும் நேர்த்திமிகு கைத்தறி சேலை இரகங்கள், வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகவும் பிரசித்திப் பெற்றுள்ள கோவைப் பகுதியில் உற்பத்தியாகும் கோரா பட்டு சேலைகள், நெகமம் காட்டன் சேலைகள், பட்டு மற்றும் காட்டன் இரக வேட்டிகள், லுங்கிகள், அங்கவஸ்திரம், துண்டுகள், போர்வைகள், தலையணை உறைகள், திரைச்சீலைகள், தரை விரிப்புகள் மற்றும் கால் மிதியடிகள் ஆகிய அனைத்து ஜவுளி இரகங்களும் இந்தக் கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சி 19.10.2010 முதல் 02.11.2010 வரை காலை 10.00 மணி முதல் இரவு 9.00 வரை நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சி அனைத்து விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும்.

மேற்படி சிறப்பு கைத்தறிக் கண்காட்சி, மத்திய அரசின் ஜவுளித் துறையின்கீழ் இயங்கும் கைத்தறி அபிவிருத்தி ஆணையரக அலுவலகத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.

சென்னை நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் வளாகத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தேவையான இடவசதியடன் நுழைவுக் கட்டணம் ஏதுமின்றி இந்த சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னைவாழ் மக்களுக்குத் தேவைப்படும் அனைத்து ஜவுளி இரகங்களையும் குறைந்த விலையில் ஒரே கூரையின்கீழ் வாங்கும் இதுபோன்ற அரிய வாய்ப்பு கடந்த காலங்களில் கிட்டியதில்லை.

**கோ—ஆப்டெக்ஸ்**

**வெளியீடு:—**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**